உ

# ஓம் ஸ்ரீ குருப்யோ நமஹ

ஹர ஹர சங்கர ஜய ஜய சங்கர



## கடக ராசி – யமுனை புஷ்கர விழா அழைப்பிதழ்



கடக ராசி – யமுனை புஷ்கர விழா அழைப்பிதழ்

**ஸ்ரீ பராபவ ஆண்டு, வைகாசி 19 (ஜூன் 2, 2026, செவ்வாய்) முதல் வைகாசி 30 (ஜூன் 13,2026, ஞாயிறு) வரை.**

நிகழ்ச்சி நடைபெறும் இடம்: **ஸ்ரீ ரகுநாத் ஆசிரமம், காத்யாயணி தேவி மந்திர் அருகில், பிருந்தாவனம்,UP**

| சித்தாந்த ஸரளி ஸிக்ரந்தம்<br>ஸ்ரீ ஸ்கந்த புராணம் - ஸ்ரீ நாரத புராணம் | | |
|---|---|---|
| மேஷேஷ கங்கா,<br>வருபேக்ஷ ரேவா,<br>மிதுனேது சரஸ்வதி,<br>கர்கடே யமுனா ப்ரோக்தா,<br>சிம்மே கோதாவரி ஸ்மிருதா, | கன்யாயாம் கிரிஷ்ணவேனிசா<br>காவேரி தடகே ஸ்மிருதா ;<br>விருச்சிகே தாமிரபரணி சா ;<br>சாபே புஷ்கரவாஹினி,<br>மகரே துங்கபத்ரா, | கும்பே சிந்து நதி ஸ்மிருதா;<br>மீனே பரணீதா நதிசா;<br>குரோ சங்கர மனோஸ்மிருதா<br>புஷ்கராக்சோ முனிநாம் ஹி<br>ப்ரவேசோ உத்ர பூதே<br>ஸ்மிருதாஹ |



ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்



அவர்களின் பரிபூரண அநுக்ரஹத்துடன்



ஸ்ரீ காஞ்சி காமகோடி மடம் 70-வது பீடம்

ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



ஸ்ரீ காஞ்சி காமகோடி மடம் 71-வது பீடம்

ஜகத்குரு ஸ்ரீ சத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

ஆஞ்ஞையின்படி, அவர்களின் அநுக்ரஹத்துடன்

நடைபெறும் புஷ்கரத் திருவிழா.



ஸ்ரீ ஸ்ரீ வித்யாதீஷ தீர்த்த சுவாமிஜி - பளிமார் மடம், உதுப்பி



ஸ்ரீ ஸ்ரீ விஷ்வ பிரசன்ன தீர்த்த சுவாமிஜி உதுப்பி ஸ்ரீ பீஜாவர் மடம்

பேரன்புடையீர்,

புஷ்கர விழா நதிகளைப் போற்றி வணங்கும் ஒரு திருவிழாவாகும். ப்ராசீனமான 12 புனித நதி தீரங்களில் இருக்கும் ஆலயங்களில் இது கொண்டாடப்படுகின்றது. அவ்வமயம் பித்ரு பூஜைகள், ஆன்மீக சொற்பொழிவுகள், பக்தி இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

புஷ்கரத் திருவிழா ஒவ்வொரு வருடமும் குரு பகவான் ஒரு ராசியில் இருந்து இன்னொரு ராசிக்கு இடம்பெயரும் பொழுது அந்தந்த ராசிக்குரிய நதிகளில் நடைபெறும் விழாவாகும். சிருஷ்டியில் இருக்கும் மூன்றரை கோடி தீர்த்தங்களுக்கும் அதிபதி ப்ரம்மா. அவற்றினுள் ஒரு சில தீர்த்தங்களுக்கு நம் புராணங்கள் புஷ்கர விசேஷத்தை நிர்வகித்துள்ளன.




ப்ரம்மாவின் கமண்டலத்திலுள்ள புஷ்கரனான குரு பகவான், குரு பெயர்ச்சி சமயங்களில் அந்தந்த ராசிக்குரிய தீர்த்தங்களில் பன்னிரண்டு நாட்கள் பிரவேசம் செய்து, வாசம் செய்வதாக ஐதீகம். இந்த புஷ்கர புண்ய காலத்தில் மும்மூர்த்திகளும், தேவர்களும், ரிஷிகளும், அந்தந்த தீர்த்தங்களுக்கு வந்து நீராடி மகிழ்வதாகவும் நம்பப்படுகின்றது. எனவே இந்த புஷ்கர காலங்களில் அந்தந்த நதிகளில் நீராடுவது மூன்றரை கோடி தீர்த்தங்களிலும் நீராடிய புண்ணியத்திற்கு நிகரானது.

திருக்கணித பஞ்சாங்கத்தின் படி கணித்தது - வருகின்ற *June* 2, 2026 அன்று (2.25 PM) குரு பெயர்ச்சி ஒவ்வொரு இராசிக்காரர்களுக்கும் நல்கும் நல்லன, அல்லன பயன்கள் & பரிகாரங்களுக்கு பெரியோர்களை கலந்து ஆலோசிக்கவும்.

இந்த வருடத்தில் வரும் இந்த **கடக ராசி யமுனை** புஷ்கர் இவ்வகையில் மிகவும் முக்கியமானதும், புண்ணியமானதும் ஆகும். இந்த 12 நாட்களும் சங்கமத்தில் ஸ்நானம் செய்தால் புஷ்கர ஸ்நானம் மற்றும் மஹா கும்பமேளா ஸ்நானம் செய்த பலன் கிடைக்கும்.

புஷ்கர காலங்களில் அந்தந்த நதிகளில் நீராடி தானம் செய்வது, மற்றைய நாட்களில் செய்யும் தானங்களைவிட பன்மடங்கு புண்ணியத்தை நல்கும். புஷ்கர காலங்களில் வரையறுக்கப்பட்ட நதிகளில் பித்ருக்களுக்கு தர்ப்பணம், திதி கொடுத்து முன்னோர்களை வழிபடுவது பித்ருசாபம் நீங்க வழி நல்கும்.  கௌரி பூஜை, கங்கை பூஜை, பிரகஸ்பதி பூஜை, தம்பதி பூஜை முதலியன செய்வதும் வாழ்வில் சகல நன்மைகளும் கிடைக்க வழி வகுக்கும்.

இத்தகைய சமயங்களில் வேத வித்துக்களுக்கும், பண்டிதர்களுக்கும், ஏனையோருக்கும் அளிக்கப்படும் தக்ஷிணை,  சமாராதனை, அன்னதானம், வஸ்திரதானம் போன்ற தானங்கள் சிறந்த புண்ணிய பலன்களை அளிப்பதாகக் கருதப்படுகிறது.

**குரு பகவான் *மிதுன* ராசியில் இருந்து *கடக* ராசிக்கு (02.06.2026) 2.25 pm பெயரும் போது *கடக* ராசிக்கு உரிய நதியான யமுனை நதியில் குரு பகவான் வாசம் செய்கிறார்.**

**ஸ்ரீ பராபவ ஆண்டு, வைகாசி 19 (ஜூன் 2, 2026, செவ்வாய்) முதல் வைகாசி 30 (ஜூன் 13, 2026, ஞாயிறு) வரை**

**குரு பெயர்ச்சி தொடங்கி இந்த 12 நாட்களும் ஆதி புஷ்கரம் யமுனை நதி** பிருந்தாவனம், உத்தரப் பிரதேசம் **என்ற தலத்தில் கொண்டாடப்படுகின்றது.**





# யமுனை மற்றும் பிருந்தாவனம்:





### 1. புனித நதி: யமுனை

- **தெய்வீகத் தோற்றம்:** சூரிய பகவானின் மகள் மற்றும் எம தர்மராஜனின் இரட்டைச் சகோதரிகள்.
- **இரவின் புராணம்:** தன் சகோதரனின் மறைவால் ஏற்பட்ட துயரத்தைத் தணிக்க, யமுனா தேவி முதல் சூரிய அஸ்தமனத்தை உருவாக்கினார்.
- **கிருஷ்ணருடன் பிணைப்பு:** கிருஷ்ணர் பிறந்தபோது அவர் பாதங்களைத் தொட யமுனை பொங்கி உயர்ந்தார்கள். பின்னாளில், நச்சுப்பாம்பான காளிங்கனை கிருஷ்ணர் அடக்கி, யமுனையைத் தூய்மைப்படுத்தினார்.
- **ஆன்மீக சங்கமம்:** பிரயாக்ராஜில் உள்ள திரிவேணி சங்கமத்தில் கங்கை நதியுடன் யமுனை கலக்கிறாள்.

### 2. புனித பூமி: பிருந்தாவனம்

- **பொருள்:** "துளசி காடு" (பிருந்தா = துளசி, வனம் = காடு)பிருந்தாவனம்.
- **பின்னணி:** கிருஷ்ணர், ராதை மற்றும் கோபியர்களுடன் நிகழ்த்திய லீலைகளின் களமாகும்.
- **வரலாற்று மீட்பு:** 16-ஆம் நூற்றாண்டில் சைதன்ய மகாபிரபு மற்றும் ஆறு கோஸ்வாமிகளால் பிருந்தாவனம் மீண்டும் கண்டறியப்பட்டது.
- **முக்கிய இடங்கள்:**
  - **பாங்கே பிஹாரி:** திரை விலக்கி மறைக்கும் "பீக்-ஏ-பூ" (peek-a-boo) சடங்கிற்குப் பெயர் பெற்றது.
  - **ராதா ரமணர்:** சுயம்புவாகத் தோன்றிய விக்கிரகம் குடி கொண்டுள்ள தலம்.
  - **பிரேம் மந்திர்:** கிருஷ்ணரின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் நவீன வெள்ளை பளிங்கு மாளிகை.

---

### முக்கிய சாராம்சம்

பிருந்தாவனமும் யமுனையும் பக்தி யோகத்தின் இதயமாகக் கருதப்படுகின்றன - இங்கு இயற்கை, வரலாறு மற்றும் தெய்வீகம் ஆகியவை 5,000 ஆண்டுகால பக்தி பாரம்பரியமாக விளங்குகின்றன.

# பிருந்தாவனம் & யமுனையின் தெய்வீகக் கதை

1. தெய்வீக லீலைகள்

- ***பாதுகாப்பு:*** இந்திரனின் மழையிலிருந்து கிராமத்தைக் காக்க கிருஷ்ணர் கோவர்தன மலையை ஏழு நாட்கள் தன் விரலால் தூக்கிப் பிடித்தார்.
- ***பக்தி:*** நிதிவனம் காட்டில் நடைபெறும் 'ராச லீலை', தெய்வீகக் காதலின் நித்திய நடனத்தைக் குறிக்கிறது.
- ***தூய்மை:*** நதியின் தூய்மையை மீட்க காளிங்கன் போன்ற அரக்கர்களை கிருஷ்ணர் தோற்கடித்தார்.





## 2. வரலாற்று மீட்பு

- ***மறைந்த காலம்:*** கிருஷ்ணரின் காலத்திற்குப் பிறகு, பிருந்தாவனம் பல நூற்றாண்டுகளாக அடர்ந்த காடுகளால் மறைந்து போனது.
- ***மீட்பு (1515):*** சைதன்ய மகாபிரபு ஆன்மீக நிலையில் இந்த புனித இடங்களை மீண்டும் கண்டறிந்தார்.
- ***அடித்தளம்:*** ஆறு கோஸ்வாமிகள் இங்கு முதல் முக்கிய கோவில்களை நிறுவினர்; இதில் அக்பர் சக்கரவர்த்தியின் ஆதரவும் சில கோவில்களுக்குக் கிடைத்தன.

## 3. புனித சங்கமம் (திரிவேணி சங்கமம்)

- ***கங்கை:*** தூய்மைப்படுத்துபவர்; பாவங்களை எரிப்பவர்.
- ***யமுனை:*** சூரியனின் மகள்; பக்தியை அளிப்பவர் மற்றும் மரண பயத்தைப் போக்குபவர்.
- ***சரஸ்வதி:*** ஞானத்தின் தேவி; அறிவை வழங்க கண்ணுக்குத் தெரியாமல் பாய்பவர். (அந்தர் வாஹினி)

## 4. முக்கிய பிரார்த்தனை (யமுனாஷ்டகம்)

"யமுனை தேவியே, உன்னை வணங்குகிறேன்!
உனது அமுதம் போன்ற நீரைப் பருகுபவர்களை எமன் ஒருபோதும் துன்புறுத்துவதில்லை.
கோபியர்கள் கிருஷ்ணர் மீது கொண்டிருந்த அதே பக்தியை எங்களுக்கும் அருள்வாயாக."

## பிருந்தாவன புஷ்கரம் மற்றும் யாத்திரையின் முக்கியத்துவம்:

- **தெய்வீகத் தொடர்பு:** பிருந்தாவனம் கிருஷ்ணரின் நித்திய இருப்பிடத்திற்கு இணையாகக் கருதப்படுகிறது.
- **லீலைகளை உணர்தல்:** கிருஷ்ணர் வாழ்ந்த இடங்களான நிதிவனம், சேவா குஞ்ச் மற்றும் யமுனை கரைகளைத் தரிசித்து அவர் பாதச்சுவடுகளைப் பின்தொடர இந்த யாத்திரை உதவுகிறது.
- **ஆன்மீகத் தூய்மை:** "பிருந்தாவன ரஜஸ்" (புனித புழுதி) ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி, கர்ம வினைகளை நீக்கும் எனப் பக்தர்கள் நம்புகின்றனர்.
- **பக்தியை வளர்த்தல்:** ஸ்ரீமதி ராதாராணி கிருஷ்ணர் மீது கொண்டிருந்த சுயநலமற்ற, தூய பக்தியை (ராதா-பாவம்) வளர்ப்பதே இந்த யாத்திரையின் நோக்கம்.
- **பரிக்கிரமா (வலம் வருதல்):** சுமார் 10 கி.மீ பிருந்தாவனப் பாதையை வலம் வருவது இறைவனிடம் சரணடைவதற்கும் முக்தி பெறுவதற்கும் ஒரு வழியாகும்.
- **பக்தர்களின் சங்கமம்:** மற்ற பக்தர்களுடன் இணைந்து ஆன்மீகப் பயிற்சிகளை வலுப்படுத்த இந்த யாத்திரை வாய்ப்பளிக்கிறது.

## நிச்சயம் தரிசிக்க வேண்டிய இடங்கள்:

பாங்கே பிஹாரி கோவில், இஸ்கான் (ISKCON) கோவில், ராதா ரமணர் கோவில், பிரேம் மந்திர் மற்றும் கேசி காட் (Keshi Ghat).

## யமுனை என்பது மனிதர்களின் பாவங்களைத் தெய்வீக பக்தியாக மாற்றும் கருணை மிக்க தேவி ஆவார்.

### யமுனை: தெய்வீக தேவி

- **தெய்வீகத் தோற்றம்:** ஏழு முனிவர்களால் (சப்தரிஷிகள்) பூமிக்குக் கொண்டு வரப்பட்ட "சொர்க்கத்தின் நதி" இது. இது முதலில் **கலிந்த மலை** மீது இறங்கியதால், இதற்கு **'கலிந்தி'** என்ற பெயரும் உண்டு.
- **திருவுருவ அமைப்பு (Iconography):** தேவி யமுனை கறுத்த நிறத்துடனும், கையில் நீர் கலசத்துடனும், **ஆமையின்** மீது அமர்ந்திருப்பவராகவும் சித்தரிக்கப்படுகிறார்.
- **ஆன்மீக சக்தி:** கங்கை நதி முக்தி (விடுதலை) அளிக்கிறது என்றால், யமுனை தேவி தன் சகோதரனான **எம தர்மராஜனின்** பயத்திலிருந்து பாதுகாப்பையும், அளவற்ற அன்பையும் (பக்தி) அருளுகிறார்.
- **குறியீடு:** கோவில்களின் நுழைவாயிலில் கங்கையுடன் யமுனையும் பெரும்பாலும் காட்சிப்படுத்துப்படுகிறார்கள்; இது பக்தர்களை உள்ளே செல்லும் முன் அடையாளப்பூர்வமாகத் தூய்மைப்படுத்துவதைக் குறிக்கிறது. யமுனையின் கரும் நீல நிறம் (ஷ்யாம்), **கிருஷ்ணருடன்** அவருக்குள்ள பிரிக்க முடியாத பிணைப்பைக் காட்டுகிறது.
- **யமுனை என்பது மனிதர்களின் பாவங்களைத் தெய்வீக பக்தியாக மாற்றும் கருணை மிக்க தேவி ஆவார்**

# சமீபத்திய புஷ்கர நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
|  | **சரஸ்வதி புஷ்கர்**<br><br>2025-ஆம் ஆண்டு, உத்தரப் பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் சரஸ்வதி புஷ்கரம் விழா மிகச் சிறப்பாகவும், மிகுந்த பக்தியுடனும் கொண்டாடப்பட்டது. மகா கும்பமேளா முடிந்த சில மாதங்களிலேயே, அதே புனிதமான சங்கமத்தில் பக்தர்கள் இந்த புஷ்கரத்தைக் கொண்டாடும் அரிய வாய்ப்பைப் பெற்றனர். இது வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கிடைக்கும் ஒரு பொன்னான வாய்ப்பாகும். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளின் தெய்வீக வழிகாட்டுதலின் கீழ், இந்த விழா மிகவும் அழகாகவும் வெற்றிகரமாகவும் நடத்தி வைக்கப்பட்டது |
|  | **நர்மதா புஷ்கர்**<br><br>கடந்த 2024 ஆம் ஆண்டு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு சங்கராச்சாரியார்கள் அருளாணைப்படி, ஓம்காரேஷ்வர், மத்திய பிரதேசத்தில் நர்மதை புஷ்கரம் வெகு சிறப்பாக நடந்தேறியது |
|  | **கங்கா புஷ்கர்**<br><br>கடந்த 2023 ஆம் ஆண்டு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு சங்கராச்சாரியார்கள் அருளாணைப்படியும், ஆதீன கர்த்தர், மடாதிபதிகள் ஒத்துழைப்புடனும் புஷ்கரம் வெகு சிறப்பாக நடந்தேறியது |
|  | **பிரம்மபுத்ரா நதி புஷ்கர்**<br><br>ஆச்சார்யாளின் கிருபையுடன் 2019 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 23ஆம் தேதி முதன்முறையாக அஸ்ஸாமில் பிரம்மபுத்ர புஷ்கரவாஹினி கௌஹாத்தியில் விமரிசையாக கொண்டாடப்பட்டது. |
|  | **கிருஷ்ணா நதி புஷ்கர்**<br><br>2016 ஆம் ஆண்டு கிருஷ்ணாவிலும், நமது காஞ்சி சங்கராச்சாரியார்கள் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் முன்னிலையில் புஷ்கரம் வெகு சிறப்பாக நடந்தேறியது |



**காவிரி நதி புஷ்கர்**

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு சங்கராச்சாரியார்கள் அருளாணைப்படியும், அவர்கள் முன்னிலையிலும், ஆதீன கர்த்தர், மடாதிபதிகள் ஒத்துழைப்புடனும், அவர்கள் முன்னிலையிலும் காவேரி புஷ்கரம் காவிரி பாயும் எல்லா இடங்களிலும் கொண்டாடப்பட்டது. குறிப்பாக மயிலாடுதுறை, அல்லூர் போன்ற இடங்களில் வெகு சிறப்பாக நடந்தேறியது.**

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள், ஆதீனகர்த்தாக்கள், மடாதிபதிகளின் ஆசிகளுடன், ஆளுநர், முதன் மந்திரி, அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சியர், அரசாங்க உயர் அதிகாரிகள் எல்லோருடைய மிகுந்த ஒத்துழைப்போடும் நடைபெறும் **இந்த** கடக ராசி யமுனை **புஷ்கர விழாவில்** பங்கு கொண்டு நதியில் நீராடி அவ்வமயம் நடைபெறும் பரிஹார ஹோமங்களில் கலந்து கொண்டு அனைத்து ஆன்மீக நிகழ்வுகளில் பங்கு பகவத் கிருபையையும், யமுனை மாதாவின் கிருபையையும், பரமாச்சார்யாள் ஆதி சங்கரரின் ஆசியையும், அருளையும் பெற்று, எல்லாம் வல்ல இறையின் கருணை கடாட்சத்திர்கும் பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தினமும் காலையில் சதுர் வேத பாராயணம், மகா ருத்ர ஜபம், சண்டி பாராயணம், காம்யார்த்த ஹோமங்கள் நடைபெறும். பிறகு கலச தீர்த்தங்கள் மதியம் 12:00 மணி அளவில் யமுனாநதி தீர்த்தத்தில் சேர்க்கப்பட்டு புஷ்கர ஸ்நானம் நடைபெறும். மாலை நதி ஆர்த்தி, விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம், லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை, ருத்ர அர்ச்சனை, நடைபெறும்.



| நாள் | தேவதை | கொடுக்க வேண்டிய தானங்கள் |
|---|---|---|
| June 02 | மித்ரன் | தங்கம், வெள்ளி, தானியம், பூமி |
| June 03 | அர்யமா | வஸ்திரம், உப்பு, பசு, ரத்தினம் |
| June 04 | திவஸ்தா | வெல்லம், கறிகாய்கள், குதிரை, பழங்கள், வண்டி |
| June 05 | சூரியன் | நெய், எண்ணை, தேன், பால் |
| June 06 | விலஸ்வான் | தான்ய வண்டி, எருமை, காளை, ஹலம் |
| June 07 | அருணா | மருந்து, கற்பூரம், கஸ்தூரி, சந்தனம், வாசனை திரவியம் |
| June 08 | பகவான் | வீடு, பீடம், படுக்கை, நாற்காலி, கிழங்கு, இஞ்சி |
| June 09 | அம்சுமான் | சந்தனக்கட்டை, புஷ்பம், முறம் |
| June 10 | இந்திரன் | சிரார்த்த பிண்டம், கன்னி, சௌபாக்கியத்ரவ்யம், மஞ்சள், கங்கணம் |
| June 11 | பர்ஜன்யன் | சாளக்கிராமம், புத்தகங்கள் |
| June 12 | விஷ்ணு | யானை, குதிரை |
| June 13 | ப்ரஹ்மா | எள், புத்தகங்கள் , பேனா, பென்சில் |

# கடக ராசி - யமுனை நதி புஷ்கரம் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| June 1, 2026 | காலை 8 மணிக்கு மங்கள இசை, வேணி மாதவர், ஆஞ்சநேயர், ஆதி சங்கரர் சந்நிதிகளில் ஆஞ்ஞாவைப் பெறுதல். மாலை 5 மணிக்கு சப்தநதிகளை குடங்களில் ஆவாஹனம் செய்து சப்த நதி பூஜைசெய்து, புண்ணிய தீர்த்தத்துடன் யாகசாலை பூசை |
| June 2, 2026 | காலை 6 மணிக்கு மங்கள இசை - துவஜகாரோஹணம் - யமுனை புஷ்கர கொடியேற்றம் - கணபதி பூஜை காலை 7 மணிக்கு கலச தீர்த்த சமர்ப்பணம், யமுனை புஷ்கர ஸ்நானம் காலை 9 மணிக்கு கணபதி ஹோமம் |
| June 3, 2026 | தோஷம் விலக்கும் நவகிரஹ ஹோமம் |
| June 4, 2026 | ஸ்ரீ ஹயக்ரீவ ஹோமம், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஹோமம், ஸ்ரீ வித்யா, மகா சரஸ்வதி ஹோமம் - கல்வி அபிவிருத்திக்கு |
| June 5, 2026 | துர்கா ஸ்வரூப ஹோமம் , ஸ்வயம்வர காலா பார்வதி ஹோமம் - கல்யாணங்கள் கைகூட |
| June 6, 2026 | ஸ்ரீ சந்தன கோபாலகிருஷ்ண ஹோமம் - ஸ்ரீ புத்ர காமேஷ்டி யாகம் - ஸ்ரீ ஷண்முக ஹோமம் - புத்திர பாக்கியத்திற்கு |
| June 7, 2026 | ஸ்ரீ தன்வந்திரி ஹோமம் - வியாதிகள் நீங்கி குணமாக |
| June 8, 2026 | ஸ்ரீ ஸ்வர்ணாகர்ஷண ஸ்ரீ பைரவ ஹோமம், வடுக பூஜா - வியாபாரம் செழிக்க. |
| June 9, 2026 | ஸ்ரீ மகா சுதர்சன ஹோமம் - திருஷ்டி அகல, , நோய்கள் விலக |
| June 10, 2026 | ஸ்ரீ குபேர மஹாலக்ஷ்மி ஹோமம் - செல்வத்திற்கு |
| June 11, 2026 | ஸ்ரீ சண்டி ஹோமம் லோக க்ஷேமத்திற்கும், ஸ்நேக சந்துஷ்டிக்கும் |
| June 12, 2026 | ஸ்ரீ மஹா ருத்ர ஹோமம் அமிர்த ம்ருத்யுஞ்ய ஹோமம் லோக க்ஷேமத்திற்கும், உடல் ஆரோக்கியத்திற்கும். |
| June 13, 2026 | ஸ்ரீ ஆயுஷ்ய ஹோமம், நக்ஷத்திர ஹோமம் நீண்ட ஆயுளுக்கும், உடல் நலனுக்கும். |

## பரிகார யாகங்கள், ஹோமங்கள்

ஸ்ரீ சிதம்பரம் பிரம்மஸ்ரீ தியாகப்பா தீக்ஷிதர் (98426 94431),
பிரம்மஸ்ரீ சிவராம தீக்ஷிதர் (9443320379)

தலைமையில் நடைபெறும்.

திதி, ஸ்ரார்த்த சங்கல்பம், தில தர்ப்பணம் செய்தல், கௌரி, பிரகஸ்பதி, தம்பதி பூஜா:

**பிரம்மஸ்ரீ ஸ்வாதிஷ் கனபாடிகள் (தமிழில்) 8072892359**

**நிகழ்ச்சி நடைபெறும் இடம்**

**நிகழ்ச்சி நடைபெறும் இடம்: ஸ்ரீ ரகுநாத் ஆசிரமம், காத்யாயனி தேவி மந்திர் அருகில், பிருந்தாவனம்**

**சிறப்பு நாதஸ்வரம்**

திருவாடுதுறை ஆதீனம் ஆஸ்தான வித்துவான், நாதஸ்வர கலைச்செல்வன்
இலுப்பபப்பட்டு ESS அரவிந்த் D.Music



நாதஸ்வர இசை வேந்தன் சிதம்பரம் R. ஐயப்பன்

தவில் இசை நாதமணி இலுப்பபப்பட்டு ES சங்கர்

தவில் இசை வேந்தன் திருப்புண்கூர் V. சம்பத்



**தினசரி திருமுறை பாராயணம்**

காஞ்சிபுரம் தேவாரஇசைமணிஸ்ரீ
கதிர்வேல் ஓதுவார் மற்றும் குழுவினர்



| ஒவ்வொரு நாளும் விழா நிகழ்ச்சி நிரல் | |
|---|---|
| 7.00 am | நாதஸ்வர இசை |
| 8.00 am | மஹந்யாஸ ருத்ர, வேத பாராயணம் |
| 10.00 am | யாகங்கள், ஹோமங்கள் |
| 11.00 am | பூர்ணாஹுதி |
| 11.30 am | *யமுனா நதி தீர்த்தவாரி பூர்த்தி* |
| 3.00 pm | நாதஸ்வரம் |
| 4.00 pm | திருமுறைப் பாராயணம் |
| 5.00 pm | கலை நிகழ்ச்சிகள் |
| 7:30 pm | யமுனை நதி புஷ்கர ஆரத்தி |

மேலான உங்கள் வருகையை அன்புடன் எதிர்பார்க்கும்

## விழாக் குழு

| | |
|---|---|
| முதன்மை அமைப்பாளர் | திருமதி மஹாலக்ஷ்மி சுப்ரமண்யன் – 9840053289<br>திரு VC சுப்ரமண்யன் – 99400 53289<br>ஸ்ரீ மஹாலக்ஷ்மி சேரிட்டபிள் டிரஸ்ட், சென்னை |
| ஒருங்கிணைப்பு<br>சரஸ்வதி புஷ்கர் | K. K ஆச்சார்யா, பண்டரிப்பூர் (88876 51536) |
| வேதபாராயணம்<br>ஒருங்கிணைப்பு | திரு ஜே சந்திரமௌலி – 9940080033<br>ஆடிட்டர், சிவார்ப்பணம் டிரஸ்ட், சென்னை. |
| நிகழ்ச்சி நிரல் பொறுப்பு | திரு வலசை கே ஜெயராமன் – சென்னை – 9444279696<br>திரு. பட்டாபிராமன் - சென்னை – 9962019172<br>திருமதி சுதா சுந்தரவரதன் – பெங்களூரு – 9663879295 |